## நிக்கவெரட்டிய பிரதேச சபை
## குருநாகல் மாவட்டம்

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிக்கவெரட்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) சபைக்குச் சொந்தமான 611 கட்டிட உருப்படிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான தளபாடங்கள் மற்றும் 41 அலுவலக உபகரண உருப்படிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 02 நிதிக்கூற்றுக்களுக்குரிய மீதிகளை பயன்பாட்டு பட்டோலைகளில் காணப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 59,427,233 ஆக வேறுபாடு காணப்பட்டது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 59,519,595 ஆக இருந்ததுடன், 2018 ஜுலை 11 ஆந் திகதி ஆகும் போது அறவிடப்பட்டிருக்க வேண்டிய மீதி 33,546,357 ஆக இருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 63,396,705 ஆக இருந்ததுடன் 2018 ஜுலை 11 ஆந் திகதி ஆகும் போதும் மேலும் செலுத்தப்பட வேண்டிய மீதி ரூபா 39,670,593 காணப்பட்டது.

**1.3.4 கணக்காய்வு தொடர்பான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக ரூபா 75,537,071 கூட்டுத்தொகையான 05 கணக்குப் விடயங்களினை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தன.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை | |
| | (i) விதி 193 | ஒவ்வொரு வருமானம் மற்றும் செலவுப் பிரிவுகனிள் கீழ் மேலதிக நிலுவை மற்றும் மீதிகள் தொடர்பான பதிவொன்று முன்வைக்கப்படவில்லை. |
| | (ii) விதி 218 | காணிகள் மற்றும் கட்டிடங்கள் சம்பந்தமாக வருடாந்த கணக்கெடுப்பு நடவடிக்கை நடைபெற்றிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| | நி.பி 571(2) | வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 1,554,064 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,653,263 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,571,888 ஆக காணப்பட்டது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**2017** **2016**

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா.000 | பட்டியலிட்ட வருமானம் ரூபா.000 | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா.000 | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா.000 | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா.000 | பட்டியலிட்ட வருமானம் ரூபா.000 | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா.000 | திசெம்பர் 31 இல் நிலுவை ரூபா.000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (i) | வீதவரி மற்றும் வரி | 3,483 | 3,778 | 3,612 | 2,184 | 3,373 | 3,503 | 3,228 | 2,018 |
| (ii) | வாடகை | 25,401 | 21,579 | 21,010 | 7,083 | 9,701 | 12,335 | 18,029 | 6,514 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,200 | 1,327 | 1,247 | 80 | 1,252 | 1,319 | 1,319 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 76,361 | 64,052 | 58,615 | 28,628 | 78,505 | 63,385 | 61,661 | 23,191 |
| மொத்தம் | | 106,445 | 90,736 | 84,484 | 37,975 | 92,831 | 80,542 | 84,237 | 31,723 |

**குறிப்பு**

மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் முன்னைய ஆண்டிற்குரியதாக அறவிடப்பட்ட ரூபா 17,171,135 உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 90 மில்லியனான போதிலும், மீளாய்வாண்டில் ரூபா 84 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 17 மில்லியன் முன்னைய ஆண்டுகளுக்கான பெறுகைகளாகும். ரூபா 84 மில்லியன் ஆக சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 69% ஆன ரூபா 58.6 மில்லியன் ஆன வருமானம் வேறு வருமான அடிப்படையில் சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 31.7 மில்லியனான மொத்த நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 37.9 மில்லியன் ஆக 20% வரை அதிகரித்துக் காணப்பட்டது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 2,142,335 தொகையான வீதவரி நிலுவையில் 01 ஆண்டிற்கும் 03 ஆண்டுகளுக்குமிடைப்பட்ட காலத்திலிருந்து அறவிடப்படாத ரூபா 393,768 மற்றும் 03 ஆண்டுகள் கடந்த நிலுவையக ரூபா 1,043,693 காணப்பட்டது. 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் 32-42 வரையான விதிகளின் பிரகாரம் காலாண்டுகளின் அடிப்படையில் நிலுவைப் பட்டியலொன்றை தயாரித்து குறிப்பிட்ட அறிவித்தல் விடுக்கப்பட்ட பின் ஆதனங்களை தடைசெய்து கொண்டு நிலுவை வரியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி அறவிடப்பட வேண்டிய ஏக்கர் வரி மற்றும் களியாட்ட வரி மீதி முறையே ரூபா 20,731 மற்றும் ரூபா 20,577 ஆக இருந்தது.

**2.2.4 வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 7,083,169 ஆன நிலுவையான வாடகை வருமானத்தில் ரூபா 5,688,300 ஆனது சுகாதார மத்திய நிலையம் மற்றும் பஸ் தரிப்பிட கடைகளுக்கான முற்பணம் ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான 08 கடைகள் வாடகைக்கு விடப்படுவது தொடர்பாக அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 458,886 ஆகக் காணப்பட்டது.

(இ) சபைக்கு சொந்தமான 11 பழக் கடைகளிலிருந்து ரூபா 45,200 , மரக்கறி கடையொன்றிலிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 2,640 மற்றும் 18 பொதுச் சந்தை கடைகளிலிருந்து ரூபா 55,737 ஆன நிலுவைகள் பல வருடங்களாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) நிக்கவெரட்டிய பஸ் நிறுத்துமிடத்தில் குத்தகைக்கு விடப்பட்டுள்ள 05 கடைகளில் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 60,431 ஆனது 2018 ஆம் ஆண்டு ஜுலை வரையில் அறவிடப்படாது காணப்பட்டது.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் பெறப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 4,150,550 ஆகவும் முத்திரைக் கட்டணம் ரூபா 18,162,671 ஆகவும் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் பொது மக்களுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் குறித்து உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய 55 பிரிவுகளுக்காக உள்ளூராட்சி திணைக்களத்தினால் உருவாக்கப்பட்ட உப விதிகளை பின்பற்றி அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வாடகைக்கு விடப்பட்ட முச்சக்கர வண்டி நிறுத்துமிடம் தொடர்பாக உப விதியொன்று சபையினால் தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சி மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு 02 வருடங்கள் கடந்த போதிலும் அதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

**(ஆ) நிதி ஏற்பாடுகள் செய்யப்படாமை**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்படாத 03 திட்டங்களுக்காக ரூபா. 1,937,259 செலவிடப்பட்டிருந்தது.

**(இ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சி நிரல் 2016 ஏப்ரல் 28 ஆந் திகதி முதல் செயற்படுத்தப்பட்டிந்ததுடன் மீளாய்வாண்டின் போது நிலைய அபிவிருத்திக்கு ரூபா 2,018,299 செலவிடப்பட்டிருந்தது. 704 தொன் அளவில் சேகரிக்கப்படும் உக்கும் கழிவுப்பொருட்களைக் கொண்டு 39 தொன் சேதனப் பசளை உற்பத்தி செய்து விற்பனை செய்ததால் மீளாய்வாண்டின் போது ரூபா 397,470 வருமானமாக பெறப்பட்டது. மேலும் கழிவுப்பொருள் செயற்திட்டம் செயற்படுத்தப்படும் இடத்தை சபையினால் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

ஐக்கிய நாடுகள் சபையின் "நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான நிகழ்ச்சி நிரல் 2030" தொடர்பாக இணையத்தின் மூலம் சபை அறிந்திருந்தது. சபையால் இனங்காணப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான ஆயத்தமாக வறுமையை ஒழித்தல் என்பதை நோக்காகக் கொண்டு வீட்டுத் தோட்ட போட்டி நடாத்துல், கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் உதவி வழங்கள் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருந்தன.

**3.2 முகாமைத்துவத் செயற்திறனின்மை**

பழுதடைந்த மின் விளக்குகள் பழுதுபார்த்தல் தொடர்பான இலக்கம், அது தொடர்பாக அவசியமான /உபயோகப்படுத்தப்படும் கருவிகள், மின் உதிரிப்பாகங்களின் உத்தரவாத காலம், வருடத்திற்குள் ஒவ்வொரு தெரு விளக்கையும் பழுதுபார்ப்பது தொடர்பான தகவல்கள் சரியான முறையில் இனங்காணக்கூடிய முறையான பதிவேடொன்று சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அம்சங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 91 ஆக இருந்ததோடு, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாரான பதவியணியினர் 83 ஆகும். மூன்றாம் மட்டத்தில் ஒரு பதவியும் முதலாம் மட்டத்தில் 07 பதவி வெற்றிடங்கள் நிலவியதுடன் மேலதிகமாக / ஒப்பந்த அடிப்படையில் 24 ஊழியர்கள் இணைக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) வீதி தொழிலாளர்கள் மற்றும் சுகாதாரத் தொழிலாளர்களாக மூவர் சபை அலுவலக நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) ஓய்வு பெற்றுச் செல்லல், இடமாற்றம் மற்றும் சேவையிலிருந்து விலகல் மூலம் 2018 ஜுலை 11 ஆந் திகதி ஆகும் போது ரூபா 158,786 ஆன ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டி இருந்தது.

**3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கே-120 மோட்டார் கிரேடரின் முன் பக்க கண்ணாடியை பொருத்துவதற்காக சபை நிதியத்தில் ரூபா 56,385 செலவிடப்பட்ட போதும் காப்புறுதி நிறுவனத்தினால் ரூபா 24,817 மட்டும் வழங்கப்பட்டமையினால் ரூபா 31,563 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2017 ஒக்தோபர் 17 ஆந் திகதி மின் உபகரண களஞ்சியத்தின் பௌதீக பரிசோதனையின் போது ரூபா 30,375 ஆன 53 மின் குமிழ்கள் பற்றாக்குறையாக காணப்பட்டன.

### 3.5 பெறுகை

### 3.5.1 பெறுகை திட்டம்

பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் பிரதேச சபையினால் பெறுகை திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 வழங்கல் மற்றும் சேவைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கேள்விகளை சமர்ப்பிக்கப்பதற்கு போதுமான நாட்கள் வழங்காது மோட்டார் கிரேடர் தொடர்பான 05 வெட்டும் ப்ளேட் சோடிகளை கொள்வனவு செய்வதற்கு கூறுவிலை கோரி ரூபா 96,000 செலவிடப்பட்டு 06 வெட்டும் ப்ளேட் சோடிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) வாகனமொன்றின் ரூபா 61,130 ஆன பழுதுபார்த்தல் தொடர்பாக பெறுகை வழிகாட்டல் கோவையின் 3:4:2 (அ) பிரகாரம் கூறுவிலைகளைக் கோராமல் தனிப்பட்ட முறையில் 3 கூறுவிலைகள் 2017 ஜுன் 20 ஆந் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. எனினும் கூறுவிலைகளை பெற்றுக் கொள்ளும் முன் 2017 ஜுன் 19 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தன.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1. பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 04 விடயங்களில் பாதிடப்பட்ட தொகை ரூபா மில்லியன் 143 ஆக இருந்த போதும் உள்ளவாறான எண்ணிக்கை ரூபா மில்லியன் 45 ஆகையால் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைக்கு இடையே 35 சதவீதம் முதல் 72 சதவீதம் வரையிலான விலகல் காணப்பட்டது.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நிலையான சொத்துக்கள் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டமை. |
| | (ii) ஆவணங்கள் மற்றும் அட்டவணைகளுக்கு இடையே வேறுபாடு |
| | (iii) பதிவேடுகள் பேணப்படாமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்படாமல் இருந்தமை |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே போதியளவு விலகல் காணப்படல் |
| (ஈ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | சொத்து மதிப்பீடு செய்தல் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை |